BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
An international open access, peer- reviewed, refereed journal

தமிழரின் ஆடைகள் ஓர் ஆய்வு

Tamilarin Aadaigal Oar Aaivu

முனைவர் சு. இளவரசி
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, ஜமால் முகமது கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 620 020.

Dr. S. Ilavarasi
Assistant professor, Department of Tamil, Jamal Mohammed college, Tiruchirappalli – 620 020
E. mail: ilavarasisubbaiah@gmail.com

Abstract

Among the basic needs of human beings, clothing holds a special place in civilization. The time when humans began to wear clothes, after learning to eat, marks the first step in the growth of civilization. The sense of modesty made humans realize the necessity of clothing. After food, clothing is considered more important than shelter. Once humans learned to dress, they gradually developed different types of garments. Though clothing serves a single purpose, it differs by the manner of wearing and by the wearer. Through colors and designs, garments have flourished in countless varieties.

Key words: Sun, Protective armor made of tiger skin, Blanket, woolen cloth

ஆய்வுச் சுருக்கம்

மக்களின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றான நாகரிகத்தில் ஆடைகள் சிறப்பிடம் பெறுகின்றது. உண்ணத் தொடங்கி மனிதன் உடுக்கத் தொடங்கிய காலம் நாகரிக வளர்ச்சியின் முதல் படியாகும். மான உணர்வு மனிதனின் ஆடையின் அவசியத்தை உணர வைக்கிறது. உணவுக்கு அடுத்து உறைவிடத்தை விட உடையே முதன்மை பெறுகின்றது. உடுக்கத் தெரிந்த பின்பு மனிதன் உடை வகைகளை வளர்த்துக் கொண்டான். உடை ஒன்றாயினும் அணியும் வகையாலும் அணிவராலும் அஃது வேறுபட்டு நிற்கிறது. வண்ணங்களிளாலும் வடிவங்களாலும் ஆடைகள் ஆயிரமாயிரமாக மலர்கின்றது என்பதை அறிய பெறுகின்றது.

ஆய்வுநோக்கம் :தமிழரின் கலாச்சாரம் பண்பாடு மற்றும் மக்களிடையே மான உணர்வை வெளிப்படுத்துவது ஆய்வின் நோக்கமாகும்.

ஆய்வுச் சிக்கல்: நவநாகரிகத்தின் அதீத வளர்ச்சியின் விளைவாக இன்றைய காலத்தின் சமூக சீர்கேடு, கலாச்சார சீர்கேடு விளைவிக்கும் நிலையை ஆய்வு ச் சிக்கலாக வரையறுக்கப்படுகின்றது.

குறிச் சொற்கள் : முருச்சுடர்- சூரியன் - புலி நிற கவசம் - புலித்தோலால் ஆன பாதுகாப்பான கவசம் – தாவளி - கம்பளி .

முன்னுரை

மனிதன் அறிவு வளர்ச்சிப் பெற்ற காலம் முதல் மக்கள் தன்னுடைய உடலை மறைப்பதற்காக இயற்கையில் கிடைக்கக்கூடிய பொருட்கள் மூலமாகவும் ஆடையை முதலில் உருவாக்கினான்.

"கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்ப தூஉம் உண்பதூஉம் இன்றிக்கெடும்" (திருக்குறள், 166)

என்னும் வள்ளுவர் வாக்கு தெளிவாக்கும். தெய்வப்புலவர் இக்குரலில் உயிர் கொடுக்கும் உண்டியை முதலில் கூறவில்லை. மயிர் நிற்பின் வாழாக் கவரிமான் அன்ன மாந்தருக்குத் தேவையான உடையையேசொல்லி செல்கிறார். ஆடை இல்லா மனிதன் அரை மனிதன் ஆள் பாதி ஆடை பாதி என்ற தமிழரின் மொழிகளும் இதன் காரணமாக கிளைத் தனவே.

ஆடையின் தோற்றம்

ஆதி காலத்தில் மனித இனம் தோன்றிய காலத்தில் விலங்கொடு விலங்காகத்தான் மனிதன் வாழ்ந்து வந்தான். விலங்கைப் போல் இலைகளையும் காய்களையும் கனிகளையும் உட்கொண்டு வாழ்ந்து வந்த போது காலப்போக்கில் கடும் பணியின் கொடுமையிலும் கடுங்குளிரின் அவதியிலும் கடுமலையின் சாரலிருந்து தப்புவதற்கு மனிதன் சிந்திக்கத் தொடங்கினான். அச்சந்தனையின் பயனாக இலைகள், தழைகள், மர பட்டைகளைக் கொண்டு உடலைக் காத்துக் கொண்டான். இதனை,

"உடுக்கும் தழை தந்தனனே அதையாம்
உடுப்பின் யா யஞ் சுதுமே" (நற்றிணை ,356)

தழையுடையின் சிறப்பினை இப்பாடல் வரிகள் விளக்குகின்றது. மனிதன் அறிவு வளர்ச்சி பெருகப் பெருக உடை மாற்றமும் உண்டாயிற்று. காலப்போக்கில் உண்டான உடைமாற்றம் நாகரிகத்தின் வளர்ச்சி நிலையே விளக்கும் வகையில் அமைந்தது. தட்பவெப்ப சூழலுக்கு ஏற்ப தனக்குத் தேவையான ஆடைகளை தயாரிக்க மனிதன் தொடங்கினான்.

பழங்கால ஆடைகள்

பழமை மாறாத மனிதன் இயற்கை உடைகளை நீக்கி செயற்கை உடைகளே உருவாக்கினான். செயற்கை உடைகளும் இயற்கை உடைகளும் இருந்த காலம் வேதகாலமாகும். செயற்கை உடைகள் என்பவை பருத்தி உடை, பட்டுஉடை, சணல் உடை, கம்பளி உடையை ஆகும். வேதக் கால உடைகள் என்பவை பருத்தி நூலால் செய்யப்பட்ட சாயம் துவைத்த புடவைகள் ஆகும். வேத காலத்தில் மன்னர்கள் பருத்தி உடையையும் பட்டுடையையும் கம்பளி உடையும் பலவித கலைத்தையல் வேலை பொருந்திய உடைகளை அணிந்து வந்தன. சுமங்கலிப் பெண்கள் புடவைகளை உடுத்தி வந்தன. துறவறம் சார்ந்தோர் கோவணம் உடுத்தினர். பௌத்தத் துறவிகளின் ஆடைகள் காவி ஆடையாக உடுத்தினர். சமணர் ஆடையை துறந்த நிலையை சீவகனின் துறவு வழி

"மணியுரை கழிப்பது போல் பல்கலப்
பணிவருப் பைந்துகினீக்கிப் பாற்கடல்
அணிபெற வரும்பிய வருக்கனாமெனத்
திணிநிலத் தியன்றதோர் திலகமாயினான்"
(சீவக சிந்தாமணி, 3028)

எனச் சிந்தாமணி நவிலும் விளக்கப்படுக்கின்றது.

ஆண்கள், பெண்கள், குழந்தைகள், அரசர்கள் போர்வீரர்கள், பொதுமக்கள் என அனைவரும் தங்களுக்கு தேவையான ஆடைகளை உடுத்தினர்.

உடையின் வேறு பெயர்கள்

இன்றையக் காலத்தில் உடைகளுக்கு இருக்கும் பெயர்களை விட அக்காலத்தில் அதிக அளவில் உடைகளின் பெயர்கள் இருந்திருக்கின்றன. அவற்றை சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லார் 36 வகைகளை உடைய உடைகளின் பெயர்களை குறித்து காட்டியுள்ளார்.அவை, கோசிகம், பீதகம், பச்சிலை,அர்த்தம்,நுண் துகில், சுண்ணம், பஞ்சுஇரட்டு, பாடகம், கோங்கலர், கோ படம், சித்திரக் கம்மி, குருதி, கரியல், பேடகம், புரியட்டக் காசு, வேதாங்கம், புங்கர்க் கழகம், சில்லிகை, தூரியம், பங்கம், தந்திரியம், வண்டை, கவற்றுமடி, நூல், திருக்கு, தேவாங்கு, பொன்னெழுத்து, குச்சரி, தேவகிரி, காத்தூலம், கிறைஞ்சி, செம்பொத்தி, வெண்பொத்தி, பணிப் பொத்தி, என்பவை ஆகும்.மேலும் உடை, ஆடை, கழகம்,பட்டு,கவசம், அரணம், சேலை, பாவாடை, கோவணம் போன்றவை மனிதன் உடுத்து ஆடை பெயர்களாகும்.

உடை வழிபாடு

உடையை வைத்து வழிபாடு செய்யும் பழக்கம் நம் நாட்டில் நெடுகாலமாக உண்டு. உடைக்கு வழிபாடு செய்வது அவ்வுடைக்கு கொடுக்கும் மதிப்பும் மரியாதையாகும். பண்டிகை நாட்களில் சிறப்பாக தீபாவளி பண்டிகை புத்தாடை வைத்து வழிபாடு செய்வது வழக்கமாக இன்றும் வழிபட்டு வருகின்றனர். பொங்கல் பண்டிகையின் போது குலதெய்வ வழிபாட்டாகக் கருதி அன்றும் புத்தாடை உடுத்தி வழிபட்டு வருகின்றனர். இன்றும் இந்துக்கள் நீராடி ஈர ஆடையுடன் இறைவனை வணங்குகின்ற தன்மையை காணலாம். முகம்மதியர் வெண்ணிற ஆடை உடுத்தி வணங்குகின்றனர். கோவிலுக்குப் போகும்போது தூய நூர் புடவை அல்லது பட்டுப் புடவை கட்டிக் கொண்டு போக வேண்டும் என்பது தமிழர்களின் நம்பிக்கை ஆகும். இன்று காவடி எடுப்போர் காவி ஆடையுடன் இருக்கின்றனர். தீ மிதித்தலுக்கு மஞ்சள் ஆடையை பயன்படுத்துகின்றனர். ஐயப்பன் பக்தர்கள் நீலம் கருமை நிற ஆடையினை உடுத்துகின்றனர்.

இவ்வனைத்து வழிபாடும் தூய்மை நிலையை உணர்த்துகின்றது. தமிழர் உணர்வு இறைவனுக்கு உடைசாத்தி வணங்கும் வழக்கினையும் வழிபாட்டில் கொண்டுள்ளது.

"தேம்படு மலர் குழை பூந்துகில் வடிமணி
ஏந்திலை சுமந்து சாந்தம் விரைஇ"(பரிபாடல்,17)

எனப் பரிபாடல் இயம்பும் தன்மை அன்றே இவியல்பு கால்கொண்டுவிட்டதை வெளிப்படுத்தும்.

தொழிலும் ஆடையும்

தொழிலுக்கு ஏற்ப ஆடை உடுத்தும் வழக்கு இன்று இயல்பான ஒன்றாக விளங்கி விட்டது. அன்றும் தமிழர் தொழிலுக்கு ஏற்ப உடை உடுத்தினார் என்பது இலக்கியம் வெளிப்படுத்தும் உண்மையாகும். தமிழரின் தொழிலுக்கேற்ற ஆடைகள் எந்தெந்த முறையில் அவனுக்கு அவனது தொழிலுக்கு பயன்படுத்தி இருக்க கூடும் என்பதை காணலாம். போர்க்காலங்களில் கோலங் கோடலில் ஆர்வம் உடைய தமிழர் போருக்கென்றும் தனித்த கோலத்தினை கொண்டு திகழ்ந்தனர். புறநானூற்றில் அமையும் அதியமானை ஒளவையார் பாடிய பாடல் போர்க்கோலம் பற்றிய உணர்வினைத் தருகின்றது.

"கையது வேலே காலது புனைகழல்
மெய்யது வியரே மிடற்றது பசும்புண்"

(புறநானூறு,100)

என்ற நிலையில் அதியமான் தன் மகனைப் பார்க்க வரும் தன்மையை உணர்த்துகின்றது. ஆடையைப் பற்றிய உணர்வு இங்கில்லை ஆயினும் போர்க்கோலம் என்பது எத்தன்மையது என்பது விளக்கவல்லது இப்பாடல் விளக்குகின்றது. போர் வீரர்களுக்கு அடிப்படைத் தேவை போர் செய்யும் வசதியும் பாதுகாப்பு தன்மையுமே ஆகும். எனவே போர் செய்யத் தடையாகாமல் இருக்கவும், எதிரியின் படைக்கலங்களில் இருந்து தங்களைப் பாதுகாக்கவும் அதற்கு ஏற்ற உடைகளை அணிகின்றனர். இந்நிலையில் போர் வீரர்களுக்குரிய ஆடைகளுள் முதலிடம் வகிப்பது கவசம் எனில் பொருந்தும். பிற ஆடைகளுக்கும் இதற்கு உரிய வேறுபாடு பருத்தி, பட்டு போன்ற இலைகளினாற் செய்யப்படாமையே ஆகும்.

"புலிநிறக் கவசம் பூப்பொறிச் சிதைய
எய்கணை கிழித்த பகட்டெழின் மார்பின்
மறலியன்ன களிற்று மிசை யோனைக்"

(புறநானூறு,13)

என சங்க இலக்கியப் பாடல்கள் விளக்குகிறது .

கவசம் அணிந்து போருக்குச் சென்றதுடன் கவசம் பற்றியதொரு மரபினையும் பின்பற்றினார் என்பதைச் சிந்தாமணிப் பாடல்வழி அறியக் கூடுகின்றது.

"புலிப் பொறிப் போர்வை நீக்கிப் பொன்னணிந்திலங்கின்ற
ஒலிக் கழன் மன்னருட்கு முருச்சுடர் வாளை நோக்கி
கலிச் சிறையாய நெஞ்சிற் கட்டியங்காரனம் மேல்
வலித்தது காண்டு மென்று வாளெயிறிலங்க நக்கான்"

(சீவக சிந்தாமணி, 266)

இப்பாடலில் கட்டியக்காரனைக் கண்ட சச்சந்தன் தன் புலியினது வரியையுடைய கவசத்தைத் தவிர்தல் நிலையை உணர்த்துகின்றது. போரில் உயிர்ப் பாதுகாப்புக் கருதியே கவசம் அணியும்பழக்கம் உருவாகிருக்கலாம் எனினும் அதனைத் தவிர்த்துச் செல்லும் நிலையினைக் காண இதற்குரிய அடிப்படையாக எது இருக்கும் என்பது புலனாகவில்லை. எனினும் உயிரை விட மரபினைப் பெரிதெனக் கருதினர். என்னும் உண்மை இங்கே வெளிப்படக் காண்கிறோம்.

நுண்கலைத் தொழில்

பண்டைத் தமிழகத்தின் நுண்கலைத் தொழில்களுள் நெய்தல் தொழில் முதன்மையான நுண்கலைத் தொழிலாக விளங்கியது. பல்வகை உடைகளில் நுண்கலைச் சிறப்பை வெளிப்படுத்தும் வகையில் நெய்தல் தொழில் புரிந்து வந்துள்ளனர். பண்டைய காலத்து தொழில்களுள் உயிர் ஊட்டும் தொழிலாக உழவுத் தொழிலையும், மானம் காக்கும் தொழிலாக நெய்தல் தொழிலையும் போற்றி வந்துள்ளனர். மனிதன் மானத்தை காத்து மதிப்பை உயர்த்தும் தொழில் நெய்தல் தொழில் என்பது பண்டைய த் தமிழரின் துணிபு. பண்டையத் காலத்தில் நெய்தல் தொழில் நெசவு நெய்யப்பட்டு வந்ததை தமிழில் இலக்கியங்கள் உணர்த்தின்றது.

"நூலினு மயிரினும் நுழைநூற் பட்டினும்
பால்வகை தெரியாப் பன்னூ றடுக்கத்த"

(சிலப்பதிகாரம், 14-205)

இதன்கண் உள்ள 'மயிரினும்' என்பதற்கு உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் எலி மயிரினாலும் என்று உரை எழுதியுள்ளார். எலி மயிரினால் சிறந்த தாவளி நெய்யப்பட்டது. நுண்கலைத் தெழிலை உணர்த்துகின்றது.

. இன்றையச்சூழலில்ஆடைகளின் நிலைப்பாடுகள்

காலச் சூழலுக்கு ஏற்ப ஆடைகளையும் தன்மைகளும் வேறுபடுகிறது. பருவ காலத்திற்கேற்ப ஆடைகளை மக்கள் பயன்படுத்தினர். நவீன கால வளர்ச்சிக்கு ஏற்ப நாகரிகத்தின் வளர்ச்சி மேம்படுகிறது.தொழில்நுட்ப வளர்ச்சியில் ஆடைகள் தனித்துறை வளர்ச்சிபெறுகின்றது.பருத்தி, சணல், பட்டு போன்றவற்றிலேயே இத்தகையதொரு தனித் தன்மையைக் காண முடியும். பண்டையத் தமிழர்களின் ஆடையின் முக்கியத்துவத்தையும் அதன் வளர்ச்சியையும் இன்றையக் காலகட்டத்தில் மனிதன் நவீன வளர்ச்சிக்கு உறுதுணையாக்குகின்றான். கல்வி வளர்ச்சியில் ஆடையின் கல்விதுறையில் புதுவிதமான ஆடை வடிவமைப்புகளைக் வடிவமைத்து வாணிபத் துறையில் பெருவளர்ச்சியை அடைந்துள்ளனர்.

முடிவுரை

தமிழரின் பண்பாட்டை விளக்குவதற்கு பயன்படும் ஆடைகளின் வளர்ச்சி நிலைகளை இவ்வாய்வில் காணலாம். பண்டையத் தமிழர்களின் பண்பாட்டையும் நாகரீகத்தையும் விளக்கப்படுகின்றது. மனிதனின் தனிச்சிறப்பு பெற்று விளங்குவது ஆடையின் சிறப்பு அம்சமாகும். தட்பவெப்ப நிலைக்கு ஏற்ப தங்களின் ஆடைகளை வடிவமைத்துக் கொண்டனர். ஆடையின் தோற்றத்துக்கு அழகு படுத்துதலே காரணம். இளைய தளைகளை உடுத்திய மனிதன் கால வளர்ச்சிக்கு ஏற்ப உடையின் வடிவமைப்பையும் தங்களுக்குகென ஏற்றது போல் வடிவமைத்துக் கொண்டனர். இன்றையச் சூழலில் ஆடையின் வடிவமைப்பால் பல வளர்ச்சித் துறையில் தனி இடத்தை பெற்றுள்ளான். இதனால் வாணிபமும் வளர்ச்சி அடைந்துள்ளது. பலரின் வேலைவாய்ப்புக்கும் இவ்ஆடை அமைப்பு முறையில் பல சாதனைகளைப் பெற்றுள்ளான்.

துணைநூற்பட்டியல்

அடியார்க்கு நல்லார் (உரை), சிலப்பதிகாரம், சென்னை, 1968.

உ. வே. சா.(உரை), சீவக சிந்தாமணி மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் , சென்னை, 1969

உ.வே.சா(பதிப்பு), புறநானூறு . சென்னை, 1971.

நற்றிணை, கழக வெளியீடு, சென்னை, 1967.

பரிபாடல், கழக வெளியீடு, 1969

பரிமேலழகர்(உரை), திருக்குறள், கழக வெளியீடு, சென்னை, 1973.

Funding

No funding was received for conducting this study.

Conflict of interest

The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.